DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சின்னக்காளை | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | படேவகவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 27/01/2025

(எதிரி ஆஜர் )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் நரிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 2014ம் வருடம் தேதி, மாதம் சரியாக ஞாபகம் இல்லை மதியம் 1.30 மணியளவில் நான் செம்மடைப்பட்டியில் வேலைக்கு வந்துவிட்டு அருகில் இருந்த டீக்கடையில் டீ குடித்துக்கொண்டு இருந்தேன். நரிப்பட்டியில் இருந்து ஜி.வி.ஜி. மில்லிற்கு செல்வதற்காக ஆட்களை ஏற்றிக்கொண்டு மகேந்திரா வேனானது வேகமாக வந்ததால் மில்லிற்கு செல்லும் ரோட்டை விட்டு விட்டு இடது பக்கம் வேனானது கவிழ்ந்துவிட்டது. எனது மனைவி பார்வதியும் மில் வேலைக்கு செல்வதால் என்னானது என்று சென்று பார்த்த போது எனது மனைவியின் மேல் வேனானது இருந்தது. உடல் நசுங்கி கிடந்தார். சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அங்கிருந்தவர்கள் சேர்ந்து வேனை நிமிர்த்திவிட்டு ஆம்புலன்ஸ் மூலம் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். பிறகு சம்பவம் தொடர்பாக ஒட்டன்சத்திரம் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். விபத்தை நேரில் பார்த்ததாலும், ரத்த வெள்ளத்தை பார்த்ததாலும் 14 வயது பையனை கையில் வைத்து இருந்ததாலும், வேனை ஓட்டிவந்த நபரை சரியாக அடையாளம் காண இயலவில்லை. எனக்கு தலை சுற்றலாக இருந்தது. புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

1) அ.சா.ஆ.1 ஐ யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும், காவல்நிலையத்திற்கு அருகே உள்ள நபர்கள் எழுதிக் கொடுத்தார்கள். புகாரிலும், போலீசார் என்னை விசாரித்த போதும் வேன் இடது பக்கமாக கவிழ்ந்துவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். புகாரிலும், போலீசார் என்னை விசாரித்த போதும் விபத்தின் போது 14 மாத குழந்தையை கையில் வைத்து இருந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடைக்குள் டீ சாப்பிட்டு கொண்டு இருந்தேனா என்றால் கடைக்கு வெளியே டீ குடித்துக் கொண்டு இருந்தேன். எனது மனைவி வந்த வாகனம் விபத்து ஏற்பட்டது என்று யார் சொன்னார்கள் என்றால் மனைவியுடன் வேலை செய்யும் நபர்கள் சொன்னார்கள்.

2) அதன்பின்பு 20 நபர்கள் சென்று வேனை நிமிர்த்தினோமா என்றால் அருகில் இருந்தவர்கள் சேர்ந்து நிமிர்த்தினோம். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்த விபத்தும் நடைபெறவில்லை என்றாலும், நான் நேரில் விபத்தை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN
Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.01.27 18:14:17 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 27/01/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாண்டியராஜன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | அன்பு | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 27/01/2025

(எதிரி ஆஜர் )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் காளாஞ்சிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் செம்மடைப்பட்டியில் ஒர்க் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். 2014 ம் வருடம் தேதி, மாதம் சரியாக ஞாபகம் இல்லை, மதியம் 1.30 மணி இருக்கும். ஜி.வி.ஜி.மில்லுக்கு சொந்தமான மகேந்திரா வண்டி திண்டுக்கல் ரோட்டில் இருந்து கேதையறும்பு ரோட்டிற்கு வலது புறமாக திரும்பும் போது வேனானது இடதுபுறமாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.அதில் 6,7 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. ஒரு பெண் மட்டும் வண்டிக்கு அடியில் சிக்கி தலை, கை, கால்கள் நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அந்த வேனை ஓட்டிவந்த நபரை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 12.05.2014 ம் தேதி மதியம் 1.30 மணியளவில் நான் கடையில் இருக்கும் போது எனக்கு தெரிந்த TN 57 Q 0979 என்ற பதிவெண் கொண்ட ஜி.வி.ஜி.மில் மகேந்திரா வேனை எதிரி மனோஜ்குமார் திண்டுக்கல்

டூ ஒட்டன்சத்திரம் மெயின் ரோட்டில் எனது ஒர்க் ஷாப்பிற்கு முன்பு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓட்டிவந்து திடீரென பிரேக் போட்டதால் வேனானது கட்டுப்பாட்டை இழந்து ரோட்டின் வலதுபுறம் இருந்து கேதையறும்பு ரோடு பிரிவில் இடது புறம் ஓடையில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்றும், அதில் பார்வதி என்பவருக்கு உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், மேலும் வேனில் வந்த நான்கு ஆண்களுக்கும் ஏழு பெண்களுக்கும் உடலில் காயங்கள் ஏற்பட்டது என்றும், அவர்கள் அனைவரையும் ஒட்டன்சத்திரம் வேம்பணன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.01.27 18:14:23 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 27/01/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw3

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தங்கவேல் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வெள்ளைச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 27/01/2025

(எதிரி ஆஜர் )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் செம்மடைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சத்தியவேனி என்னும் பெயரில் டீ ஸ்டால் வைத்து தொழில் செய்து வருகிறேன். 2014ம் வருடம் மதியம் 1.30 மணி இருக்கும் நான் எனது கடையில் டீ போட்டுக் கொண்டு இருந்தேன். மகேந்திரா வேனானது திண்டுக்கல்லிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்த வேனானது கேதையறும்பு நோக்கி திரும்பும் போது வேனானது கவிழ்ந்து விட்டது. நான் வருவதற்குள் அனைவரையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். வேனை ஓட்டிவந்த நபரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 12.05.2014ம் தேதி மதியம் 1.30 மணியளவில் நான் எனது டீ கடையில் இருக்கும் போது TN 57 Q 0979 என்ற பதிவெண் கொண்ட ஜி.வி.ஜி.மில் மகேந்திரா வேனை எதிரி மனோஜ்குமார் திண்டுக்கல்

டு ஒட்டன்சத்திரம் மெயின் ரோட்டில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓட்டிவந்து திடீரென பிரேக் போட்டதால் வேனானது கட்டுப்பாட்டை இழந்து ரோட்டின் வலதுபுறம் இருந்து கேதையறும்பு ரோடு பிரிவில் இடது புறம் ஓடையில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்றும், அதில் பார்வதி என்பவருக்கு உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், மேலும் வேனில் வந்த நான்கு ஆண்களுக்கும் ஏழு பெண்களுக்கும் உடலில் காயங்கள் ஏற்பட்டது என்றும், அவர்கள் அனைவரையும் ஒட்டன்சத்திரம் வேம்பணன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.01.27 18:14:29 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 27/01/2025